**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.245 /2020**

**06.10.2025**

**P.W.1- தனபாலசந்திரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளில் 1 முதல் 3 வரையிலானவர்கள் என் சகோதரர் ஜெயபாலசந்திரனின் வாரிசுகள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரரி ஆவார். 5 முதல் 9 பிரதிவாதிகள் என் சகோதரர் ஜெயபாலசந்திரனிடம் பிரிக்கப்படாத சொத்தை கிரையம் வாங்கியவர்கள் ஆவார்கள். சுமார் 6 ஏக்கர் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிராதில் எத்தனை இலக்க சொத்து தாக்கல் செய்துள்ளேன் என குறிப்பிட்டு கூற இயலாது. மேற்படி 6 ஏக்கர் சொத்து லிங்கப்பநாயக்கனூர்,சுழிஒச்சான்பட்டியில் மற்றும் சின்னகுறவக்குடி அமைந்துள்ள சொத்துக்கள் ஆகும். தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்களாகும். எனது தகப்பனார் 1985ல் காலமானார். எனது தகப்பனார் பெயர் முத்தனத்தேவர் ஆகும். எனது தாயார் பெயர் தாயம்மாள் (எ) ஒச்சம்மாள் ஆகும். எனது சகோதரர் ஜெயபாலசந்திரன் 2019ல் காலமானார் என்றால் சரிதான். முத்தனத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து நான், 4ம் பிரதிவாதிக்கு தானபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். மேற்படி தானபத்திரத்தில் கண்ட சொத்தினை பொறுத்து வழக்கில் வழக்கிடை சொத்தாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது தங்கைக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரத்தில் கண்ட சொத்தும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி தானபத்திரத்திற்கு முன்பு நானும், 1 முதல் 4 பிரதவாதிகள் சேர்ந்து வாக்கரலாக குடும்ப சொத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சில குடும்ப சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. திம்மநத்தம் கிராமத்தில் புல எண்.201/1ல் கண்ட சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக

பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை வழக்கிடை சொத்தாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.06 17:12:13 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.